ராணி காமிக்ஸ்
முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்
தங்க மலை இரகசியம்
ரூ. 3

ராணி காமிக்ஸ் – 336
(மாதம் இருமுறை இதழ்)
ஜூன் 16 – 30
1998

முகமூடி வீரர் **மாயாவி** தோன்றும்

தங்கமலை இரகசியம்

பெங்காலியாவிற்கு அருகில் உள்ள அடர்ந்த காட்டின் கிழக்குப் பகுதியில் இரண்டு குட்டி நாடுகள் இருந்தன.
இந்தப் பயணம் நமக்கு வெற்றியாக அமையுமா?
சோதனைக்கு தளவாடங்கள் தயாராக இருக்கின்றன.
அந்த நாட்டின் மேலே வெளிநாட்டு விமானம் ஒன்று பறந்துகொண்டிருந்தது.
அந்த இரண்டு நாடுகளில் ஒன்று பரோன்கான். ரெக்ஸ் பரோன்கான் நாட்டை ஆட்சி செய்தான்.
?
அந்த நாடுகளின் போட்டோவும், அதன் முடிவுகளும் கிடைத்திருக்கின்றன!
இந்த மலை முகட்டில் தங்கம், முத்துக்கள், எண்ணெய் இருக்கிறது என்று எப்படித் தெரியும்?

மாதிரிக்கு அந்த இடத்து மண் இருந்தால் சோதித்துப் பார்க்கலாம்!
நாம் அங்கே போய்விட வேண்டியது தான்!
அந்த குட்டி நாடுகளை 12 வயது குழந்தைகள்தான் ஆட்சி செய்கின்றன!
குழந்தைகளா? அப்படியானால் பிரச்சினை இல்லை!
பரோன்கான் நாட்டை ஆட்சி செய்யும் ரெக்சு அலிசியாவை நினைத்துக்கொண்டிருந்தான்.
சாரணா நாட்டை அலிசியா என்ற 12 வயது சிறுமி ஆட்சி செய்தாள். அவளும் ரெக்சை நிலனத்துக்கொண்டிருந்தாள்.
ரெக்ஸ் மிக இனிமையானவன். அவனை திரும்ப எப்பொழுது சந்திப்பேன்?


பரோன்கான் நாட்டில்– ரெக்ஸ்.
போனிலாவது அவளுடன் தொடர்பு கொண்டு நேரில் சந்திக்க முயற்சித்துப் பார்க்கவேண்டியதுதான்!
கலோனல் பெட்ராக்! நான் அலிசியாவுடன் போனில் பேச வேண்டும். அவள் நம்பர் என்ன?
போனிலா? அரசே! அது சிக்கலாயிற்றே!
இராணுவ கவுன்சிலிடம் கேட்காமல் அவர்களுடன் தொடர்புகொள்ள சட்டத்தில் இடமில்லை!
அதேநேரம்– அலிசியா...
நான் ஏன் ரெக்சிடம் பேசக்கூடாது என்கிறீர்கள்?
டியர்! அவன் பரோன் நாட்டை ஆள்கிறவன்! எதற்கும் உன் ஆலோசகர்களிடம் கேட்டு செயல்படு!
நம் நாட்டுக்கு எதுவும் பிரச்சினையாகிவிடக் கூடாது! முதலில் அவன் போன் செய்யட்டுமே?

இரண்டு நாட்டு குழந்தைகளும் அருகருகே இருந்தாலும் சந்திக்கமுடியாமல் திணறிக்கொண்டிருந்தார்கள்.
அரசே! விஞ்ஞானிகள் உங்களை காணவந்திருக் கிறார்கள்!
அரசே! உலகில் வேறு எங்கும் கிடைக்காத அதிசய செடி வகைகள் உங்கள் நாட்டு மலைகளில் கிடைக்கிறது!
அப்படியா?
அதைப்பற்றி ஆய்வு செய்ய வந்திருக்கிறோம்!
அதிசயச் செடிகளா?
பூக்கள், பறவைகள், பூச்சிகள்கூட வித்தியாசமாக இருக்கின்றன!
அதை கண்டு பிடித்தால் உலக நாடுகள் உங்களைத் தேடிவருவார்கள்.

அரசே! அவர்கள் நம் மலையில் உள்ள பறவைகள், பூக்கள், செடிகளைப் பற்றி ஆய்வு செய்ய தயாராக இருக்கிறார்கள்!
பரோன்கான்தான் பெரிய நாடு. அதனால் முதலில் இங்கு வந்துவிட்டோம்!
சாரணாவில் அவைகள் இல்லையா?
எங்கள் ஆய்வுக்கு உங்கள் அனுமதி வேண்டும்!
முதலில் அலிசியாவை பார்த்து வாருங்கள். அதன்பிறகு நான் அனுமதி தருகிறேன்!
அலிசியாவை பார்க்கும்போது இந்த கவரை அவளிடம் கொடுங்கள்!
ஓ.கே. சார்!
சாரணா நாட்டில்—
ரெக்சு இவர்களை அனுப்பி இருக்கிறான். இங்கும் பூக்கள் பறவைகளை ஆய்வு செய்ய வந்திருக்கி றார்கள்!
ரெக்ஸ் என்ன சொன்னார்?

அவர் இந்த கவரைக் கொடுக்கச் சொன்னார்.
டியர் அலிசியா, நாம் எங்கே, எப்போது சந்திக்கலாம். மிகவும் ஆவலுடன் இருக்கிறேன்!
கடிதம் கண்டு அலிசியா மகிழ்ந்தாள்.
விஞ்ஞானிகள் ரெக்சிடம் திரும்பி வந்தார்கள்.
அரசே! அலிசியா எங்களுக்கு அனுமதி வழங்கி விட்டார்கள்.
ஓ.கே.!
உங்கள் பாதுகாப்புக்கு காவலர்களை அனுப்புகிறோம்.
உங்களை பாதுகாப்பது எங்களது கடமை!
அலிசியா உங்களுக்கு ஒரு கவர் கொடுத்து அனுப்பினார்கள்!
ஆகா!
டியர் ரெக்ஸ்! எங்கே எப்போது என்று சொல்லுங்கள்! தயாராக இருக்கிறேன்!
அலிசியா!

விஞ்ஞானிகளுடன் காவலர்களும் காட்டுக்குள் சென்றார்கள்.
நில்லுங்கள்! இங்கேயே ஆய்வு செய்கிறோம்!
இங்குள்ள பறவைகள், பூக்கள், செடிகள் உங்களுக்குச் சொந்தம். எதுவும் செய்து கொள்ளலாம்!
ரொம்ப நன்றி!
விஞ்ஞானிகள் தலைமையுடன் தொடர்புகொள்வதற்காக வயர்லெஸ் சாதனங்களை காட்டுக்குள் பொருத்தினார்கள்.
ஆகா வைரம்! வைடூரியம்!
ஆனைத்தும் அற்புதம்!
ஆய்வு நடத்திக்கொண்டு இருக்கிறோம். 500 அடிக்கு கீழே நிச்சயமாக எண்ணெய் இருக்கும்!

இது ஒரு தங்கமலை! எப்படியாவது வெட்டிச் செல்ல வேண்டும்!
எண்ணெய், தங்கம், வைரம், வைடூரியம் எல்லாம் இருக்கின்றன!
இந்த மலையில் கோடி கோடியாக புதைந்து கிடக்கின்றன!
அவர்கள் பேசுவதை காவலாளி கேட்டான்
ஏய்... நீங்கள் செடி, பூக்கள், பறவைகள் ஆய்வு செய்வது போலத் தெரியவில்லையே?
பூமியின் வளத்தை முதலில் ஆய்வு செய்ய வேண்டும்!
உங்கள் திட்டம் எனக்குத் தெரிந்துவிட்டது! மரியாதையாக ஆய்வை முடித்துக்கொண்டு புறப்படுங்கள்!
நாங்களா திரும்பிச் செல்ல வேண்டும்!
டமார்...!
ஆ...!
ஒருவன் காவலாளியை தாக்கினான்.

ரெக்ஸ் ஆலோசகர்களிடம் கேட்டான்.
சாரணா நாட்டுடன் தொடர்புகொண்டால் சிக்கல்கள் வெடிக்கும்!
அலிசியாவை சந்திக்காமல் இருப்பது நல்லது!
சே! அவளை பார்க்காமல் எப்படி இருப்பேன்! பேசவும் கூடாது என்கிறார்களே?
காட்டில் உள்ள மர வீட்டில்—
ரெக்ஸ் எப்படி இருக்கிறாய்?
அய்யா ஜாலி!
ரெக்சா?
!
மாமா! எனக்கொரு பிரச்சினை. அலிசியாவை சந்திக்கக்கூடாது என்கிறார்கள்! எனக்கு அவளைப் பார்க்க வேண்டும்!
யார் அப்படிச் சொன்னது?
இராணுவ கவுன்சிலர்கள்!

இங்கிருந்து 10 மைல்தான் தூரம். குதிரையை எடுத்தால் பார்த்துவிட்டு வந்துவிடுவேன்!
வேண்டாம் ரெக்ஸ்! நான் வந்து இரா்ணுவ கவுன்சிலர்களிடம் பேசுகிறேன்!
நல்லது மாமா!
எனக்கு ஒரு கெலிகாப்டரை வழக்கமான இடத்துக்கு அனுப்புங்கள்!
யார் அவர்?
கமாண்டர்தான். அதற்குமேல் எதுவும் கேட்காதே!
ரெக்சுக்கு எப்படியாவது உதவ வேண்டும்!
இருவரும் குழந்தைகள்தானே! சந்தித்துக் கொள்ளுவதில் என்ன தவறு?
அவனுக்கு பழகுவதற்கு நண்பர்கள் தேவைப் படுகிறார்கள்! எப்படியாவது உதவுங்கள்!

இதுதான் அந்த மலைமுகடு!
கீழே வாக்கரையும் அவருடைய நாயையும் அழைத்துச் செல்ல வேண்டும்!
அதோ அவர்தான்!
வாக்கர்! இதுதான் உங்கள் நாயா?
ஆமாம்! எங்களை பரோன்கான் நாட்டில் இறக்கிவிடு!
பரோன்கான் நாட்டில்—
அதோ மாமா வந்துவிட்டார்!
வணக்கம் சார்! உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி!
நன்றி கலோனல் பெட்ராக்! ரெக்ஸ் எப்படி இருக்கிறான்?

அவருக்கு எந்தக் குறையும் இல்லை!
ரெக்ஸ்! எப்படி இருக்கிறாய்?
மாமா! உங்களையும், டெவிலையும் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சி!
மாமா! நான் டயானா, கிட், கிலாயிஸ், உங்க்ளை எல்லாம் இழந்துவிட்டதாக நினைக்கிறேன்!
நாங்களும் உன்னை அப்படித்தான் நினைக்கிறோம்!
காட்டில்—
இவனுக்கு உயிர் இருக்கிறது! நமது திட்டத்தை யாரிடமாவது சொல்லிவிடக்கூடும்!
அவன் கதையை முடித்துவிடுவோம்!

அவனை சுடாதே!
இவனை விட்டுவிட்டால் நம்மைக் காட்டிக் கொடுத்துவிடுவான்!
!
குண்டுபட்டால், உடம்பை மறைக்க வேண்டும்! அதனால் அந்த மலை உச்சியில் இருந்து தள்ளி விட்டுவிடுவோம்!
காவலாளியை மலை உச்சியில் இருந்து தள்ளி விட்டார்கள்.
தூக்கிப் போடு!
இனி பயம் இல்லை!
யாரும் அவனை கண்டுபிடிக்க முடியாது!

நமக்கு வேண்டிய
மாதிரியை எடுத்துவிட்டு
புறப்படுவோம்!
மலையில் இருந்து தள்ளிவிடப்
பட்ட காவலாளி பாதாளத்துக்
குள் விழுந்து மரத்தில் சிக்கிக்
கொண்டான்.
ஆ...! ஆ...!
மாயாவி இரர்ணுவ கவுன்சிலில் பேசினார்.
இங்கே பாருங்கள்
மாயாவி! ரெக்ஸ் நன்றாக
இருக்கவேண்டுமானால்
சொல்வதைக்
கேளுங்கள்!
ஆமாம்!
இரண்டு நாட்டுக்கு
மிடையே அரசியல் பூகம்பம்
வெடித்துவிட்டால் பிறகு
போர்... போர்தான்!
மாமா! நான் அவளை
பார்க்கவும், பேசவும்
முடியாதா?
இல்லை! ஆனால்
அதற்கு ஒரு திட்டம்
வைத்து இருக்கிறேன்!

ரெக்ஸ்தான் அலிசியாவிடம் பேசக்கூடாது! நான் பேசலாம் அல்லவா?
அது உங்கள் விருப்பம்!
அலிசியாவா? நான் ரெக்சின் பாதுகாவலர் வாக்கர் பேசுகிறேன்! நினைவிருக்கிறதா?
நான் எப்படி உங்களை மறக்க முடியும்? அந்த முகமூடி, அந்த நாய்...! ரெக்ஸ் எப்படி இருக்கிறான்?
நன்றாக இருக்கிறான். நான் உனக்கு ஒரு ஆச்சரி யத்தை தரப்போகிறேன்!
ரெக்ஸ்! நீ அலிசியாவிடம் பேசு!
!
கர்னல் பெட்ராக் ரெக்ஸ் பேசுவதை கவனித்தார்.
!

மிஸ்டர் வாக்கர்! போனை வைத்துவிட்டு அவரை வெளியே வரச் சொல்லுங்கள்!
மன்னிக்கணும் பெட்ராக்! அவன் முக்கிய விசயம் பற்றி பேசுகிறான்!
இளவரசி அலிசியா! எப்படி இருக்கிறாய்?
நன்றாக இருக்கிறேன்! இளவரசி என்றதற்கு ரொம்ப நன்றி!
அந்தப் பெண்ணிடம் ரெக்ஸ் பேசுவதை நிறுத்தப்போகிறீர்களா?
அவள் சாரணாவை ஆட்சிபுரிகிறவள்! அரசியலுக்கு ஆபத்து வரும்!
என்னிடமே துப்பாக்கியை காட்டுகிறீர்களா?
எனக்கு வேறு வழியில்லை!
சிறிது நேரத்திற்கு துப்பாக்கி என்னிடம் இருக் கட்டும்!
மாயாவி சட்டென்று துப்பாக்கியை பறித்தார்!

அலிசியா! நான் உன்னை பார்க்க விரும்புகிறேன்! உனக்கு என்னை பார்க்க ஆசை இல்லையா?
இருக்கு! விரைவில் பார்ப்போம்! ஆனால் எப்படி? எங்கே?
பேச நேரம் இல்லை! ஒரு திட்டம் சொல்லுகிறேன் கேள்!
மாயாவி! நான் பாதுகாவலர்களை வரவழைப்பேன்!
ஏன் கலோனல்... எதுவும் விபரீதம் நடந்துவிட்டதா
இன்றைக்கு அற்புதமான நாள்!
உனக்கு மகிழ்ச்சிதானே?

இது சாப்பாட்டு நேரம். பயங்கரமாக பசிக்கிறது மாமா!
கலோனல் பெட்ரோ! அந்தப் பெண்ணிடம் பேசியதும் எப்படி தலை கால் புரியாமல் ஆடுகிறான் பார்த்தீர்களா?
அரசர் மகிழ்ச்சியாக இருப்பதை இப்போதுதான் பார்க்கிறேன்!
இந்தாருங்கள் கலோனல்! உங்கள் துப்பாக்கி!
அது எப்படி கண் இமைப்பதற்குள் என் துப்பாக்கியை எடுத்துவிட்டீர்கள்!
எல்லாம் பழக்கம்தான்!
என்னை முட்டாளக்கிவிட்டு ரெக்சை அலிசியாவிடம் பேச வைத்துவிட்டீர்களே?
ஏன் அதை கவுன்சிலிடம் சொல்லப் போகிறீர்களா?
இல்லை!

ரெக்ஸ்! அலிசியாவை சந்திக்க வைக்க என்னால் முடியவில்லை!
பரவாயில்லை மாமா! அவளுடன் என்னை பேச வைத்ததே போதும் மாமா!
ரெக்ஸ்! இது உன் நாடு. நீதான் மன்னன். சட்டப்படி தான் நடந்து ஆகவேண்டும்!
என்க்குத் தெரியும் மாமா!
இரவு வணக்கம் மாமா!
நன்றாக தூங்கு ரெக்ஸ்! காலையில் டிபன் சாப்பிடும்போது சந்திப்போம்!
மாயாவி படுத்து யோசனையில் ஆழ்ந்தார்.
அவளுடன் பேசியதற்கே ரெக்ஸ் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறான்!

அதேநேரம்— ரெக்ஸ் உறங்காமல் விழித்து இருந்தான்.
விடிவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது!
ஆகா... விடிந்து விட்டது!
ரெக்ஸ் அதிகாலை எழுந்து உடையை மாற்றிக்கொண்டான்.
மாமாவிட ம் சொன்னால் என்னை தடுத்து நிறுத்திவிடுவார்!
குதிரை தயாரா?
தயாராக இருக்கிறது அரசே!
ரெக்ஸ் குதிரையில் ஏறி கோட்டை எல்லைக்கு வந்தான், அங்கே காவலாளி இருந்தான்.

இவனை எப்படி
சமாளிப்பது?
!
அதேநேரம்— சாரணா நாட்டில் அலிசியா இரகசியமாக புறப் பட்டாள்.
கொர்ர்ர்...!
கொர்ர்ர்....
அம்மா! நான் உங்களுடன் பாதுகாப்புக்கு வரட்டுமா?
வேண்டாம்!
அலிசியா குதிரையில் புறப்பட்டாள்.
காவலாளியைப் பார்த்ததும் குதிரை மிரண்டது.
நான் பார்த்துக்கொள் ளுகிறேன்!
ஏய்... நில்!
அரசே... பத்திரம்!

நான் வெளியே போவதை யாரிடமும் சொல்லக் கூடாது! இது என் கட்டளை!
அப்படியே செய்கிறேன்!
ரெக்ஸ் கோட்டை எல்லையை கடந்தான்.
அதேநேரம்— அலிசியாவும் கோட்டை வாயிலுக்கு வந்தாள்.
வரவேண்டும் அரசியாரே!
ஏய்... அந்த பாலத்தை கீழே இறக்கு!
அரசியாரே! நீங்கள் வெளியே போகக்கூடாது என்று கட்டளை!
நான் சொல்வதைச் செய்!
பாலம் இறங்கியதும், அலிசியா வெளியே வந்தாள்.
?

ரெக்ஸ் என்னை ஊசி மலைக்கு வரச்சொன்னான்! இதோ ஊசி மலை!
ஊசி மலையில் ரெக்சை காணவில்லையே? அவன் இன்னும் வரவில்லையா?
அலிசியா!
பிக்னிக் மாதிரி சாப்பிடுவதற்கு எல்லாம் கொண்டுவந்து இருக்கிறாயே?
என் வீடு அடர்ந்த காட்டுக்குள் அல்லவா இருக்கிறது!

அடர்ந்த காட்டுக்குள்ளா?
ஆமாம் அழகான இடம்! பிக்மி குள்ளர்கள், யானை, சிங்கக்குட்டி எல்லாம் இருக்கின்றன!
அதேநேரம்— விஞ்ஞானிகளின் போர்வையில் இருந்த கொள்ளையர்கள் காலை டிபன் சாப்பிட்டார்கள்.
சீக்கிரம் புறப்படுவோம்!
புறப்படலாமா?
பரோன்கான் காவலாளியை என்ன செய்தீர்கள்?
நாங்கள் அவரை சுட்டுக் கொல்லவில்லை!
பயப்படாதீர்கள். அவனை மலை மீது இருந்து தள்ளி விட்டுவிட்டோம்!
பரோன்கான் காவலாளி பாதாளத்தில் சமவெளியில் கிடந்தான்.

காவலாளி சாகாமல் உயிர் பிழைத்து நம்மை தேடிவரும்போது நாம் இங்கே இருக்கமாட்டோம்!
ஆனால்,.எண்ணெய், தங்கம் எடுப்பதை அவன் சொல்லிவிட் டால் நம்மை சிறையில் அடைத் துவிடுவார்கள்!
அவற்றை கொள் ளையடிக்காவிட்டால் நம் தலைவர்கள் நம்மை வாழவிடமாடடார்கள்!
நீ போய் அந்த காவலாளியை தேடு. உயிர் இருந்தால் கொன்று விட்டு வா. நாங்கள் காத்தி ருக்கிறோம்!
ரெக்ஸ்! அழகான பிக்னிக் இது! அடுத்தது என்ன?
காட்டுக்குள் நடக்கவேண்டி யதுதான்!

தனியாக நான் காட்டுக்குள் சென்றதே இல்லை!
அதுதான் கூட நான் இருக்கிறேனே?
தனியா என்றால், வீரர்கள் இல்லாததை சொல்கிறேன்!
இருவரும் அப்படியே காட்டுக்குள் நடந்தார்கள்.
ரெக்ஸ்! உன் வீட்டை கண்டுபிடிக்க முடியாமல் போனால் என்ன செய்வது?
கவலைப்படாதே! வழிதெரியாவிட்டால் ஒரு மூலையில் ஒதுங்கிக்கொள்ள வேண்டியதுதான்!
சாரணா நாட்டு அரசி நீ! நான் பரோன்கான் நாட்டு மன்னன் என்று நாம் சொன்னால் யாராவது நம்புவார்களா?
அது இருக்கட்டும்! எனக்கு காட்டை நினைத்துத்தான் பயமாக இருக்கிறது!

ஏய்... ரெக்சை எங்கே?
அதிகாலையில் குதிரையில் போனார்!
மாயாவியின் அறைக்கதவு தட்டப்பட்டது.
டொக்...! டொக்...!
வாக்கர்! அரசர் ரெக்சை காண வில்லை
ஆபத்து வந்துவிட்டது பார்த்தீர்களா?
அவசரப்படாதீர்கள் கலோனல்! அவன் எங்கே போய் இருப்பான் என்று எனக்குத் தெரியும்.
மாயாவியும் கலோனல் பெட்ராக்கும் ரெக்சை தேடி புறப்பட்டார்கள்.
ரெக்ஸ் ஊசிமலைக்குச் சென்று இருப்பான்!
நம்முடன் சில வீரர்களை அழைத்துக்கொள்வோமா?
தேவையில்லை கலோனல்! நீங்கள் கூட தேவையில்லை! நான் தனியாக செல்வேன்!

அப்படியில்லை! மன்னருக்கு எதுவும் என்றால் நாட்டில் பிரச்சினை வெடிக்கும்!
வாருங்கள்! ரெக்சுக்கு எதுவும் ஆகாது!
ஆகா என்ன அருமையான இடம்!
ஏதோ சத்தம் கேட்கிறதே?
என்ன சத்தம்! எங்கே இருந்து வருகிறது!
ஆ... அய்யோ...!
இருவரும் அடிபட்டு கிடக்கும் காவலாளியை பார்த்தார்கள்.
ஆ... அம்மா...!

ரெக்ஸ் எதற்காக அலிசியாவை சந்திக்கிறார்?
நண்பர்களாக பழகுகிறார்கள்! இருவரும் பிக்னிக் வந்து இருக்கிறார்கள்!
அவர்கள் பழகுவது நாட்டுக்கு ஆபத்து ஆச்சே!
ஒரு ஆபத்தும் இல்லை!
இருவரும் தனிமையில் காட்டுக்குள் சென்று இருக்கிறார்கள்! கெட்டமனிதர்களாலும், மிருகங்களி னாலும் அவர்களுக்கு ஆபத்து நேர்ந்துவிடாதே!
வேகமாகப் போகலாம்!
யார் அது?
தெரியவில்லை! அவர் உடையைப் பார்த்தால் என் நாட்டு காவலாளி யைப் போல் தெரிகிறது!
முனங்குகிறாரே! ஏதும் அடிபட்டு இருக்குமா?
அவருக்கு உதவி செய்யலாம்!

எச்சரிக்கை ரெக்ஸ்!
ரெக்ஸ் காவலாளியை நோக்கி வந்தான்.
அட நீங்களா அரசே!
அட லூகா! நீயா? இவன் என் பாதுகாப்பு வீரர்!
என்ன நடந்தது?
இங்கே ஆய்வுக்கு என்று வந்திருப்பவர்கள் தங்கம், எண்ணெயை கடத்த வந்திருக்கிறார்கள்!

ரெக்ஸ் லூகானுக்கு உதவி செய்தான்.
ஆ...ஆ...!
மெதுவாகப் போங்கள்!
பார்த்து எழுந்திரியுங்கள்!
சிறிது ஓய்வு எடுங்கள்.
இனி என்ன செய்வது ரெக்ஸ்?
காவலாளியை தேடிவந்தவன் அப்படியே அதிர்ந்து நின்றான்.
காவலாளிக்கு உயிர் இருக்கிறது! கூட இரண்டு பையன்கள் இருக்கிறார்கள்!
அவன் திரும்பிவந்து தன் சகாக்களிடம் தெரிவித்தான்.
காவலாளி சாகவில்லை! அவனுடன் இரண்டு பையன்கள் வேறு இருக்கிறார்கள்!
நீ என்ன செய்தாய்? அவனைக் கொல்ல வில்லையா?

அது எப்படி முடியும்! கூடவே இரண்டு பையன்கள் இருக்கிறார்களே?
முட்டாள்! அந்த பொடிசுகளை தீர்த்துவிட்டல்லவா வந்திருக்க வேண்டும்! போ! போய் காரியத்தை முடி!
அவர்கள் நம் மலையில் இருக்கும் எண்ணெய், தங்கம் வைரத்தை தேடி வந்திருக்கிறார்கள்! தடுத்த என்னை கொல்ல முயன்றார்கள். மலையில் இருந்து தள்ளிவிட்டு விட்டார்கள்.
!
முதலில் மரத்தில் விழுந்தேன்! பிறகு அதிலிருந்து தரையில் விழுந்தேன்! எலும்பு முறிந்துவிட்டது!
அதோ பார்!
இந்தப் பொடிசுகளா?

நாங்கள் குதிரையில்தான் வந்து இருக்கிறோம்! அரண்மனைக்குச் சென்றுவிடலாம்!
நன்றி மன்னா...!
இந்த இரண்டு பொடிசுகளை இதற்குமுன் நீ பார்த்தது இல்லையா?
யார் அவர்கள்?
பரோன்கானையும், சாரணாவையும் ஆட்சி செய்கிறவர்கள் இந்த பொடிசுகள்தான்! அவன் ரெக்ஸ்!
அவள் அலிசியா?
!
ரெக்சும், அலிசியாவும், கைத்தாங்கலாக லூகானை அழைத்துச் சென்றார்கள். திடீரென்று எதிரில்—
அவர்கள் வந்து விட்டார்கள்!
?

உங்கள் இருவரால் அவனைத் தூக்கிச் செல்ல முடியாது! நாங்களும் உதவி செய்கிறோம்!
நான் யார் என்று தெரியுமா?
என் வழியில் குறுக்கிடாதே!
என்னைப்பற்றி உனக்குத் தெரியாது! மரியாதையாக திரும்பிப் போய்விடு மன்னா!
ஆபத்து நெருங்கிவிட்டது! பொடியன்களே உங்களுக்கு உதவி தேவையா?

நீ யாராக இருந்தால் எனக்கென்ன! துப்பாக்கியை கீழே போடு! உன்னை கைது செய்கிறேன்!
பொடியா! அளவுக்கு அதிகமாக பேசாதே!
ரெக்ஸ் பட்டென்று அவன் கையில் ஒரு வெட்டு வெட்ட, துப்பாக்கி எகிறி விழுந்தது.
மாயாவி சொல்லிக் கொடுத்த பயிற்சி ரெக்சுக்கு உதவியது.
ஆ...!
டமார்!
அலிசியா நீ ஓடிவிடு!
மாயாவி ரெக்சுக்கு சகல வித்தைகளையும் கற்றுக் கொடுத்திருந்தார்.
கராத்தேயில் ரெக்சு நல்ல தேர்ச்சி பெற்று இருந்தான்.
உதைப்பதிலும் ரெக்ஸ் கெட்டி!

ரெக்ஸ் அவனை அப்படியே தூக்கி நச்சென்று தரையில் போட்டான்.
டமார்!
ஆ... அய்யோ!
ஏய் அவனை ஓடவிடாதே!
வா அலிசியா! லூகான்! உதவி கேட்போம்!
இருவரையும் சுட்டுக் கொன்றுவிடவா?
சாகடிக்கக்கூடாது!

வழுக்கைத் தலையன் ரெக்ஸ், அலிசியா மீது குறிவைத்தான்.
அதை காவலாளி லூகான் பார்த்தான்.
லூகான் பாய்ந்து வழுக்கை தலையன் மீது பொத்தென்று விழுந்தான்.
ஆ... அம்மா!
ஏய்... நில்லுங்கள். ஓடினால் சுட்டுத் தள்ளிவிடுவேன்!

அவன் நிற்கச் சொல்கிறான் அல்லவா?
டேய்... நில்லுங்கள்!
ரெக்ஸ்! இப்ப என்ன செய்வது?
மற்றவர்களும் அங்கே வந்தார்கள்.
இதோ இதுதான் ஊசிமலை! இங்கேதான் அவர்கள் வந்து இருக்க வேண்டும்!
அங்கே ஓர் இடத்தில் ரெக்ஸ் அலிசியாவின் குதிரைகள் நின்றன.
அதோ அவர்களுடைய குதிரைகள்!
இதோ இங்கே அமர்ந்து சாப்பிட்டு ஓய்வு எடுத்திருக்கிறார்கள்!

அவர்கள் அதிக தூரம் போய் இருக்க மாட்டார்கள்.
பால் குளிர்கிறது! பெட்ராக் இங்கேயே இருங்கள்!
நானும் வருகிறேன்!
வேண்டாம்! என்னுடன் டெவில் மட்டும் இருந்தால் போதும்!
வழுக்கை தலையன் தன்மேல் விழுந்த லூகானை புரட்டிவிட்டான்.
டேய்!... நகருடா?
நான் திரும்பி வந்து உன்னை கவனிக்கிறேன்!

இதோ பொடிசுகளை பிடித்துவிட்டோம்!
வெரிகுட்!
இந்த இருவரையும் என்ன செய்யலாம்!
இருவரையும் விடுங்கள். யார் முதலில் ஓடுகிறோம் என்று பாருங்கள்!
முட்டாள் வாயை மூடுடா!
நாம் வேலையை முடிக்கும்வரை இவர்கள் நமக்கு தொந்தரவு கொடுக்கக்கூடாது!
அதனால் இவர்களை... இவர்களை...

முட்டாள்! பொடியர்கள் என்று எங்களை தவறாக எடை போடாதே!
ஆ... அம்மா!
பொடிப்பயலே! என்னையே உதைத்துவிட்டாயா? உன்னை...!
முதலில் உன்னை வைத்து 10 மில்லியன் சம்பாதித்துக் கொள்ளுகிறேன். பிறகு உன்னை கண்டதுண்டமாக வெட்டிப் போடுகிறேன்!
!
ஒவ்வொருவருக்கும் ஒரு மில்லியன் கிடைக்கும்!
இந்த பொடியர்கள் நாட்டை ஆண்டு என்ன சாதிக்கப் போகிறார்கள்!

இவர்கள் ஒவ்வொருவருக்கும் 10 மில்லியன் எடுத்துக்கொண்டு நகர எல்லைக்கு வரச்சொல்!
மாயாவி அங்கே வந்தார்.
அப்படியே நாம் பறக்க ஒரு விமானம் வேண்டும் என்று கேள்!
த்தூ...! தைரியமிருந்தால் ஒற்றைக்கு ஒற்றை வாங்கடா பார்க்கலாம்!
டேய் வாயை மூடுடா!
அப்படிப் போடு! என் சிங்கக்குட்டி!
யாரடா அது?
மாயாவி மரத்தில் இருந்து குதித்தார்.
அவன் சொல்வது போல உங்களுக்கு யாருக்காவது தைரியம் இருக்கிறதா?
அய்... மாமா!
!

அவன் துப்பாக்கியை எடுத்தான்.
யாராக இருந்தாலும் என் துப்பாக்கிக்கு பதில் சொல்!
அடுத்த விநாடி மாயாவியின் துப்பாக்கி குண்டுகளை கக்கியது!
?!
!
!!
டுமீல்...!
அவன் துப்பாக்கி எகிறி விழுநதது.
என்ன வேகம்!
டுமீல்...!

இனி எப்படி துப்பாக்கியை எடுப்பீர்கள்?
அதற்குள் கோடலி, மண்வெட்டியை வைத்து மாயாவியை தாக்க முயன்றார்கள்.
உன்னை உயிரோடு விட்டால்தானே துள்ளுவாய்?
டேய்... உன்னை...!
மாயாவி பட்டென்று அவர்களுடைய ஆயுதங்களைப் பிடித்தார்.
படார்...!
அதை வைத்து அவர்களையே திருப்பித் தாக்கினார்.

அவர்கள் மாயாவியின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் திணறினார்கள்.
யார் இவன்?
இனி கொஞ்சமும் தாமதிக்கக் கூடாது!
மாயாவி மண்வெட்டியை சுழற்றி ஓடுகிறவர்கள் மீது வீசினார்.
அது சுழன்று சுழன்று சென்று நச்சென்று ஒருவன் தலையில் மோதியது.
டமார்...!
ஆ...!
டமார்...!
அப்பா! தலை போச்சு!
வழுக்கை தலை ஓட முயன்றான்.
டெவில்! அவனைப் பிடி!

மாயாவி கட்டளையிட்டதும், டெவில் அவன் மீது பாய்ந்தது.
இப்பொழுது என்ன சொல்லுகிறாய்?
என்னை விடுவியுங்கள்!
முட்டாள்! போயும் போய்: சிறுவனை அடிக்கப் பார்க்கிறாயா? அவன் இரண்டு ஆள் பலம் கொண்டவன்!
அவன் பொடியன் என்கிறாயா? அவனிடம் சண்டையிட்டு வெற்றி பெறு பார்ப்போம்!
இல்லை. தெரியாமல் சொல்லிவிட்டேன்! இனி அப்படி சொல்ல மாட்டேன்!

இந்த காவலாளியை கொல்ல முயன்றாயா?
அதுமட்டுமில்லை! நம் மன்னரை கடத்தி பணம் பறிக்க முயன்றான்!
இரண்டு குட்டி நாடுகளும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும்!
ரெக்ஸ்! நான் வரட்டுமா?
அலிசியா?
மாயாவி இரண்டு நாட்டு கவுன்சிலர்களை அழைத்துப் பேசினார்.
உங்களை ஆழ்கிறவர்கள் நண்பர்களாகிவிட்டார்கள். நீங்களும் பகையை மறந்து நட்புடன் செயல்படலாமே?

ரெக்சும், அலிசியாவும் எப்பொழுது வேண்டுமானாலும் சந்தித்துக்கொள்ளட்டும்! இனி பகை வேண்டாம்!
ஓ.கே.! நாங்கள் தயார்.
நாங்களும் தயார்!
ரெக்ஸ்! இனி நமக்கு கவலையில்லை! நாம் எப்பொழுதும் சந்தித்துக் கொள்ளலாம்!
மாமா! எனக்கு அவளை பிடித்திருக்கிறது. நான் அவளை காதலிக்கிறேன்!
ரெக்ஸ்! காதலிப்பதற்கு இன்னும் வயசு இருக்கிறது!
நான் அவளை திருமணம் செய்துகொள்ள வேண்டும்!
உங்கள் இருவருக்கும் 12 வயதுதான் ஆகிறது! சற்று பொறுத்திருங்கள்!
இன்னும் எவவளவு நாள் கர்த்திருக்க வேண்டும்?
அதற்குரிய நேரம் வரட்டும். நானே அப்பொழுது சொல்கிறேன்!
(முடிந்தது)

அடுத்த காமிக்ஸ்

ரிவால்வர் **ரீட்டா** தோன்றும்

வெடி குண்டு கும்பல்

முக்கிய நகரை வெடிகுண்டு வைத்து சிதறடிக்க ஒரு கூட்டம் முயல்கிறது. அதைத் தடுக்க வருகிறாள் ரிவால்வர் ரீட்டா!

ஜூலை 1-ந் தேதி "ராணிகாமிக்ஸ்" இதழில் வெளிவருகிறது!

படிக்கத் தவறாதீர்கள்!

"ராணி காமிக்ஸ்", சென்னை - 600 007.

Regd.with the registrar of Newspaper
for India under No. 42576/84 – ISSN 0971-8567

JUNE 16, 1998

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

* அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
* புராண படக்கதை
* துப்பறியும் படக்கதை
* குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
* மாயாஜால சிறுவர் தொடர்கதை
* சிறுகதைகள்
* பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் இலவச இணைப்பாக 32 பக்க வண்ண புத்தகம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்